***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 231 /2021– P.W. 4 (LW2)***

| | |
|---|---|
| *Name* | மனோகரன் |
| *Father/Husband's Name* | த/பெ.சுந்தரேசன் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 67 |

**எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 30.01.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் , தேதி, மாதம் ஞாபகம் இல்லை. மன்னார்குடியிலிருந்து தஞ்சாவூர் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தேன். நான் எனது காரில் எனது மனைவி மற்றும் மகளுடன் காரில் சென்றுகொண்டிருந்தேன். மன்னார்குடியில் இருந்து 5 கிமீ தூரத்தில் உள்ள ஒரு பள்ளி அருகே தஞ்சாவூரில் இருந்து மன்னார்குடி நோக்கி வந்து கொண்டிருந்த டெப்போ வேனை ஓட்டி வந்த நபர் வேகமாக வந்ததை பார்த்து நான் லெப்ட் அனைத்து விட்டேன். மேற்படி நபர் அப்படி இருந்தும் எனது கார் மீது மோதி பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபரை அடித்து தூக்கிவிட்டார் , அதில் இருசக்கர வாகனத்தில் வந்த ஆண் நபர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். நான் காரை நிப்பாட்டிவிட்டு இறங்கி ஓடினேன் எனக்கு தெரிந்த ஒரு நபர் வேனுக்குப்பின்னால் காரில் வந்தார் அவர் விரட்டி சென்று காரை வழிமறித்து நிப்பாட்டி விட்டார். பின்னர் அந்த டிரைவரை விரட்டி சென்ற நபர் அழைத்து வந்தார். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். இந்த விபத்திற்கு வேனை வேகமாக ஓட்டிவந்த நபர்தான் காரணம். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) போலீசார் என்னை விசாரித்தார்கள். விசாரித்தபோது நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை சொன்னேன். சம்பவ இடம் S வடிவ வளைவு உள்ள இடம் என்றால் சரிதான். நான் கிழக்கில் இருந்து மேற்காக எனது வாகனத்தை செலுத்தினேன். விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் வாகனம் மேற்கிலிருந்து கிழக்காக வருகிறது. அதனால் எனது வாகனத்திற்கு பின்புறம் என்னால் பார்ப்பது என்பது இயலாத காரியம்.

2) சம்பவ இடத்திற்கு அருகில் ஒரு குறுக்கு சந்து ஒன்று உள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன ராஜவேல் என்பவர் தனது இருசக்கர வாகனத்தை குறுக்காக ஓட்டி வந்ததனால் விபத்தினை தவிர்ப்பதற்காக இவ்வழக்கின் எதிரி தனது வாகனத்தை திருப்பும் பொழுது எனது வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

3) நான் எனக்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக காப்பீடு பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் இல்லை என்றும், போலீசார் விசாரணையில் சொல்லாத விவரங்களை தற்பொழுது நீதிமன்றத்தில் புதிதாக சொல்கிறேன் என்றும், இந்த விபத்து எதிரியின் செய்கையினால் ஏற்படவில்லை என்றும், இறந்துபோன ராஜவேல் என்பவர் ஓட்டிய வாகனத்தை முறை தவறி இயக்கியதால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 231 /2021– P.W. 5 (LW3)***

| | |
|---|---|
| *Name* | கோமதி |
| *Father/Husband's Name* | த/பெ.மனோகரன் |
| *Village* | மன்ஞர்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *60* |

**எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 30.01.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் , தேதி, மாதம் ஞாபகம் இல்லை. எனது மகள் தஞ்சாவூர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். மன்னார்குடியிலிருந்து தஞ்சாவூர் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தேன். நான் எனது கணவர் மற்றும் மகளுடன் காரில் சென்றுகொண்டிருந்தோம்.

2. நான் காரில் டிரைவர் சீட்டுக்கு அருகில் உள்ள சீட்டில் உட்கார்ந்திருந்தேன். செருமங்கலம்அருகே நாங்கள் சென்று கொண்டிருந்தபோது திடீரென்று ஒரு சத்தம் கேட்டது. எனது கணவர் காரை நிறுத்திவிட்டார். அப்போது எனது கணவர் காருக்கு பின்னால் வந்த ஒரு நபர் அடிப்பட்டுக்கிடந்தார் , என்ன நடந்தது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை. எனது மகளுக்கு அன்று எக்சாம் இருந்ததால் நாங்கள் உடனடியாக சென்று விட்டோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தஞ்சாவூர் , மன்னார்குடி சாலை என்பது அகலமான சாலை என்றால் சரிதான். இரண்டு புறமும் வாகனங்கள் செல்வதற்கு இடையில் தடுப்புகள் உள்ளது என்றால் இல்லை. மக்கள் கூடி விட்டார்கள். நாங்கள் எக்சாம் போகும் அவசரத்தில் இருந்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.